வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-செங்கேணி பழனி

தேதி 4.9.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி, 2 நாடுகளுக்கான 3 நாள் பயணத்தின் இரண்டாம் கட்டமாக, இன்று புரூனேயில் இருந்து சிங்கப்பூர் சென்றுள்ளார்.

முன்னதாக புரூனேயில், அந்நாட்டு சுல்தானுடன் பிரதமர் நடத்திய பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து, முக்கியத் துறைகளில் ஒத்துழைக்க, இருநாடுகளுக்கும் இடையே **புரிந்துணர்வு ஒப்பந்தம்** கையெழுத்தாயிற்று.

இந்தியாவில் **இளைஞர் விகிதம்** அதிகமாக உள்ளதன் அனுகூலத்தை அடுத்த 25 ஆண்டுகளில், நன்கு பயன்படுத்திக் கொள்ளுதல் அவசியம் என்று, மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறி உள்ளார்.

**ஆசிரியர் தினம்** நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி, புதுச்சேரி துணை நிலை ஆளுநர், முதலமைச்சர் ஆகியோர், ஆசிரியப் பெருமக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

மோடி

பிரதமர் திரு நரேந்திர மோடி, 2 நாடுகளுக்கான 3 நாள் பயணத்தின் இரண்டாம் கட்டமாக, இன்று புரூனேயில் இருந்து சிங்கப்பூர் சென்று சேர்ந்துள்ளார். விமான நிலையத்தில் சிங்கப்பூர் உள்துறை அமைச்சர் திரு கே சண்முகம், பிரதமர் திரு நரேந்திர மோடியை வரவேற்றார் சிங்கப்பூர்

பிரதமர் திரு லாரன்ஸ் வோங் விடுத்த அழைப்பின் பேரில் பிரதமர் திரு நரேந்திர மோடி இப்பயணத்தை மேற்கொண்டுள்ளார். சிங்கப்பூரில் இரு தலைவர்களும் இணைந்து, இந்தியா-சிங்கப்பூர் கூட்டாண்மை உறவுகளின் முன்னேற்றத்தை மறுஆய்வு செய்வதுடன், பரஸ்பர அக்கறை உள்ள பிராந்திய மற்றும் சர்வதேச பிரச்சனைகளையும் விவாதிக்க உள்ளனர்.

பிரதமர் திரு நரேந்திர மோடி சுமார் 6 ஆண்டு இடைவெளிக்கு பின்னர் சிங்கப்பூர் செல்வதும், சிங்கப்பூரில் இருந்து இந்தியாவிற்கான முதலீடுகள் மற்றும் வர்த்தக தொடர்புகள் அண்மைக் காலங்களில் தொடர்ந்து அதிகரித்து வருவதும் குறிப்பிடத் தக்கது.

பிரதமர் திரு நரேந்திர மோடி முன்னதாக புரூனேயில், சுல்தான் ஹாஜி ஹசன்னால் போல்கியாவுடன், பிரதிநிதிகள் நிலையில் பேச்சு வார்த்தை நடத்தினார். பாதுகாப்பு, வர்த்தகம், முதலீடுகள், எரிசக்தி, விண்வெளி, கலாச்சாரம், மற்றும் மக்கள் நிலையிலான தொடர்புகளில் இருதரப்பு உறவுகளின் முன்னேற்றத்தை இரு தலைவர்களும் ஆய்வு செய்தனர். பரஸ்பர அக்கறை உள்ள பிராந்திய மற்றும் சர்வதேச பிரச்சனைகள் குறித்து, கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர்.

கிழக்கு நோக்கி செயல்படுவதான இந்தியாவின் கொள்கையிலும், இந்தோ-பசிபிக் பிராந்தியம் பற்றிய இந்தியாவின் தொலைநோக்கு பார்வையிலும் புரூனேக்கு முக்கிய இடம் இருப்பதாகவும், இது,

இருநாடுகளின் பிரகாசமான எதிர்காலத்திற்கு, உத்தரவாதமாக திகழும் என்றும், பிரதமர் திரு நரேந்திர மோடி கூறினார். இந்தியா-புருனே தூதரக உறவுகள் 40-ஆம் ஆண்டை எட்டி இருப்பது குறித்தும் அவர் மகிழ்ச்சி வெளியிட்டார். 2016-ஆம் ஆண்டு இந்தியாவின் குடியரசு தின விழாவில் தலைமை விருந்தினராக புரூனே சுல்தான் கலந்து கொண்டதை இந்திய மக்கள் இப்போதும் பெருமையுடன் நினைவு கூர்வதாக பிரதமர் குறிப்பிட்டார்.

இருதரப்பு பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து, செயற்கை கோள்கள் மற்றும் ராக்கெட்டுகளுக்கான தொலை நிலைக் கண்காணிப்பு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைக்க, இருநாடுகளுக்கும் இடையே, புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. பரஸ்பர அக்கறை உள்ள பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்திக் கொள்ளவும், உறவுகளின் அந்தஸ்தை உயர்த்தவும் இருநாடுகளும் முடிவு செய்துள்ளன.

இந்த சந்திப்பைத் தொடர்ந்து புரூனே சுல்தான் அளித்த விருந்தில் பிரதமர் திரு நரேந்திர மோடி பேசுகையில், புரூனேயில் உள்ள இந்திய வம்சாவளியினர், அந்நாட்டின் சமூக பொருளாதாரத் துறைகளில் முக்கிய பங்களித்து வருவது குறித்து மகிழ்ச்சி வெளியிட்டார். புரூனே தலைநகர் பந்தர் செரி பெகவான், மற்றும், சென்னைக்கு இடையே நேரடி விமான சேவை தொடக்க முடிவு செய்யப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

*மோடி-பாரா லிம்பிக்ஸ் (12)*

பாரீஸ் பாராலிம்பிக்ஸ் போட்டிகளில் பங்கேற்கும் இந்திய வீரர்-வீராங்கனைகள் இதுவரை இல்லாத அதிக எண்ணிக்கையில் பதக்கங்களை வென்று சாதனை படைத்திருப்பதால், இந்தியா பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைந்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். இந்த சாதனை இந்திய குழுவினரின் ஆர்வம், அர்ப்பணிப்பு மற்றும் மன உறுதியை வெளிப்படுத்துவதாகவும். இந்திய குழுவில் இடம் பெற்றுள்ள ஒவ்வொருவருக்கும் தாம் வாழ்தத்து தெரிவித்துக் கொள்வதாகவும் பிரதமர் கூறி உள்ளார். 2020-ஆம் ஆண்டு டோக்கியோ பாரா லிம்பிக்ஸ் போட்டிகளில் இந்தியா அதிக பட்சமாக 19 பதக்கங்களை வென்ற நிலையில், இம்முறை, பாரீஸ் பாரா லிம்பிக்ஸ் போட்டிகளுக்கான இந்திய குழுவினர்,இதுவரை 3 தங்கம், 8 வெள்ளி உட்பட 21 பதக்கங்களை வென்றுள்ளனர்.

*கிரந்த சாகிப்*

சீக்கியர்களின் புனித நூலான **ஆதி கிரந்தம்** குரு பீடத்தில் அமர்த்தப்பட்ட நாளைக் குறிக்கும், குரு கிரந்த சாகிப் பிரகாஷ் பர்வ தினத்தை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். சமூதாயத்தில் சகோதரத்துவம் மற்றும் நல்லிணக்கத்தை வலியுறுத்தும் குரு கிரந்த சாகிப், மற்றவர்களுக்கு சேவை புரியும் எண்ணத்தை, உலகெங்கிலும் கோடிக் கணக்கிலான மக்களுக்கு ஊட்டி வருவதாக வாழ்த்துச் செய்தியில் அவர் கூறி உள்ளார். ஆதி கிரந்தத்தில்

அடங்கி உள்ள ஞானம், உலக நன்மைக்குப் பாடுபடும் முயற்சிகளில், மக்களைத் தொடர்ந்து வழிநடத்தும் எனத் தாம் நம்புவதாகவும் பிரதமர் கூறி உள்ளார்.

*பிரதான் (15)*

இந்தியாவின் மிகப் பெரிய வலுவே இளைஞர் சக்தி தான் என்றும், இந்திய மக்கள் தொகையில் இளைஞர் எண்ணிக்கை அதிகமாக உள்ளதன் அனுகூலத்தை அடுத்த 25 ஆண்டுகளில், முழுமையாக பயன்படுத்திக் கொள்ளுதல் அவசியம் என்றும் மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில் கல்வி நிறுவனங்களுக்கான மேம்பாட்டு திட்டம் குறித்த பயிலரங்கில் உரையாற்றிய அவர். நடப்பு பிரச்சனைகளுக்கு புதுமையான தீர்வுகளை கண்டு பிடிக்க ஏதுவாக, உயர்கல்வி நிறுவனங்கள், பல்துறைக் கல்விக்கான வாய்ப்புக்களை மாணவர்களுக்கு வழங்க வேண்டும் என்றார். பல்கலைக் கழக மானியக் குழுவை, உயர்கல்வி நிறுவனங்களின் ஒழுங்கு முறை அமைப்பாக மட்டுமின்றி, உயர்கல்வி நிறுவனங்களுக்கு தேவையான வசதிகளை வழங்கும் அமைப்பாகவும் பார்க்க வேண்டும் என அவர் குறிப்பிட்டார். உயர் கல்வித் துறைக்கான அரசின் விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகள் குறித்து UGC தயாரித்துள்ள தொகுப்பு நூலையும் அமைச்சர் இந்நிகழ்ச்சியின் போது வெளியிட்டார்.

தேர்தல்

ஜம்மு-காஷ்மீரில் அடுத்த மாதம் 1-ஆம் தேதி நடைபெற உள்ள 3-ஆம் கட்ட சட்டமன்ற தேர்தலுக்கான தேர்தல் அறிவிக்கை நாளை வெளியிடப்பட்டு, வேட்பு மனு தாக்கல் தொடங்க உள்ளது. மொத்தம் உள்ள 90 தொகுதிகளில் 40 தொகுதிகளுக்கு, இந்த இறுதிக் கட்டத்தில் தேர்தல் நடைபெறும். அரியானா மாநிலத்தில் மொத்தம் உள்ள 90 தொகுதிகளுக்கு ஒரே கட்டமாக, அக்டோபர் 5-ஆம் தேதி நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலுக்கான வேட்புமனு தாக்கலும் நாளை தொடங்க உள்ளது.

*வாழ்த்து*

ஆசிரியர் தினம் நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோர், ஆசிரியப் பெருமக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். சமுதாய மரபின் பெற்றோர்களுக்கும் தெய்வத்திற்கும் இணையான மரியாதைக்குரியவர்கள் ஆசிரியர்கள் என்றும், மாணவர்களுக்கு கல்வியுடன் ஒழுக்கத்தையும் கற்பித்து நல்ல சமுதாயத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களின் கடமை உணர்வையும், அர்ப்பணிப்பையும், போற்றி பாராட்டும் நாளே ஆசிரியர் தினம் என்றும் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தமது வாழ்த்துச் செய்தியில் கூறி உள்ளார்.

சிந்தனை வளமும், செயல்திறனும் நிறைந்த வலிமை மிகு பாரதத்தை உருவாக்கும் பாதையில், ஆசிரியர்கள், மாணவர்களை வழி நடத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார் முதலமைச்சர் திரு ரங்கசாமி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் இந்திய கலாச்சார மரபில் ஆழமாக வேரூன்றி உள்ள குரு-சிஷ்ய உறவின் பிரதிபலிப்பே ஆசிரியர் தினம் என்றும், பெற்றோருக்கு அடுத்தபடியாக கருதப்படும் ஆசிரியர்களுக்கு, ஒவ்வொரு மாணவரின் வாழ்விலும் முக்கியமான இடம் உண்டு என்றும் கூறி உள்ளார். மாணவர்களுக்கு அறிவூட்டியும், சரியான பாதை காட்டியும், மாணவர்களின் எதிர்காலத்தை பிரகாசமாக்கப் பாடுபடும் ஆசிரியர்களின் அன்புக்கும், அர்ப்பணிப்பு உணர்வுக்கும் நன்றி சொல்ல நாம் அனைவரும் கடமைப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் குடியரசு தலைவர் எஸ் ராதாகிருஷ்ணன் பிறந்த நாள் ஆசிரியர் தினமாக கொண்டாடப்படுவதை சுட்டிக்காட்டி, மாநில கல்வி அமைச்சர் திரு நமச்சிவாயம் வெளியிட்டுள்ள செய்தியில் கல்விச் செல்வத்துடன் மாணவர்களுக்கு வாழ்க்கை லட்சியத்தையும் கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு, ஒவ்வொரு நாளும் போற்றத் தக்கது என்று கூறி உள்ளார்.

ஆசிரியர் தினம்

புதுச்சேரியில் பள்ளிக் கல்வி இயக்ககம் சார்பில் நாளை, பெருந்தலைவர் காமராஜர் மணி மண்டபத்தில் நடைபெற உள்ள ஆசிரியர் தின விழாவில், துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு, நல்லாசிரியர் விருதுகளை வழங்குகிறார். ஓய்வு பெற்ற ஆசிரியர்களை, முதலமைச்சர் திரு ரங்கசாமி கவுரவிக்கிறார். சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், முன்னிலையில் கல்வி அமைச்சர் திரு நமச்சிவாயம் தலைமையில் நடைபெற உள்ள இவ்விழாவில் மாநிலங்களவை உறுப்பினர் திரு செல்வகணபதி, மக்களவை உறுப்பினர் திரு வைத்திலிங்கம் முதலமைச்சரின் பாராளுமன் செயலர் திரு ஜான்குமார். மற்றும், தலைமைச் செயலர் உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்க உள்ளனர்.

ஒப்பந்தம்

திரிபுரா தேசிய விடுதலை முன்னணி, மற்றும், அனைத்து திரிபுரா புலிகள் படைக்கும், திரிபுரா அரசு, மற்றும், மத்திய அரசுக்கும் இடையே, தீர்வு ஒப்பந்தம், புதுடெல்லியில் இன்று கையெழுத்திடப்பட்டது. மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, திரிபுரா முதலமைச்சர் திரு மாணிக் சகா, மற்றும், மத்திய-மாநில அரசு அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர். திரிபுராவைச் சேர்ந்த 2 குழுக்கள் ஆயுதங்களைக் கைவிட்டு, நாட்டின் பிரதான நீரோட்டத்தில் இணைவது மகிழ்ச்சிக்குரியது என்றும், இதனால் திரிபுரா மாநிலத்தின் வளர்ச்சி

உறுதியாகும் என்றும் திரு அமித் ஷா கூறினார். வடகிழக்கு மாநிலங்களுக்கும் டெல்லிக்கும் இடையே முன்பிருந்த இடைவெளியை, பிரதமர் திரு நரேந்திர மோடி போக்குவரத்து வசதிகள் மூலம் நீக்கி இருப்பதுடன், **மனதளவிலான மக்கள் இடைவெளியும்** நீக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். வடகிழக்கு மாநிலங்களின் அமைதி மற்றும் வளர்ச்சியை உறுதிப்படுத்தும் வகையில், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு இதுவரை, 12 ஒப்பந்தங்களை இறுதி செய்திருப்பதும் இதனால் சுமார் 10 ஆயிரம் பேர், ஆயுதங்களைக் கைவிட்டு பிரதான நீரோட்டத்தில் இணைந்து இருப்பதும் குறிப்பிடத் தக்கது.

மேக்வால்

மத்திய சட்டம் மற்றும் நீதித் துறை அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மேக்வால், இன்று புதுடெல்லியில், **புதிய நோட்டரி இணைய தளத்தை** தொடக்கி வைத்தார். **டிஜிட்டல் இண்டியா** இலக்குகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள இந்த இணைய தளம், **நோட்டரி வழக்கறிஞர்கள்** மற்றும் பொது மக்களின் பயன்பாட்டிற்கு ஏற்றதாக இருக்கும் என்றும் நோட்டரிகள் மற்றும் அரசுக்கு இடையிலான பாலமாக செயல்படும் என்றும் அவர் கூறினார்.

காற்றழுத்தம்

மத்திய மேற்கு மற்றும் அதனை ஒட்டிய, வடமேற்கு வங்க கடலில், நாளை காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகக் கூடும் என சென்னை

வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 10-ஆம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது.

வானிலை

குஜராத்தில் இன்று, மிக கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், குஜராத், கொங்கண், கோவா, கிழக்கு ராஜஸ்தான் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் அடுத்த 7 நாட்களுக்கு, கனமழை பெய்யக் கூடும் என்றும் இந்திய வானிலை ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது. நாட்டின் மேற்கு, வடகிழக்கு மற்றும் மத்திய பிராந்தியங்களிலும் கடலோர கர்நாடகா, கேரளா, மாகே உள்ளிட்ட பகுதிகளிலும் அடுத்த 1 வாரத்திற்கு பரவலாக மழை இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி, 2 நாடுகளுக்கான 3 நாள் பயணத்தின் இரண்டாம் கட்டமாக, இன்று புரூனேயில் இருந்து சிங்கப்பூர் சென்றுள்ளார்.

முன்னதாக புரூனேயில், அந்நாட்டு சுல்தானுடன் பிரதமர் நடத்திய பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து, முக்கியத் துறைகளில் ஒத்துழைக்க, இருநாடுகளுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று.

இந்தியாவில் இளைஞர் விகிதம் அதிகமாக உள்ளதன் அனுகூலத்தை அடுத்த 25 ஆண்டுகளில், நன்கு பயன்படுத்திக் கொள்ளுதல் அவசியம் என்று, மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறி உள்ளார்.

**ஆசிரியர் தினம்** நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி, புதுச்சேரி துணை நிலை ஆளுநர், முதலமைச்சர் ஆகியோர், ஆசிரியப் பெருமக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.